செய்துள்ளது. மேலும், ஆலைத் தொழிலாளர்களுக்கு வழங்கப்பட வேண்டிய சம்பளத்தைக் கொடுப்பதற்கு வழிவகைக் கடன் அரசிடம் கேட்கப்பட்டுள்ளது. கடன் கிடைக்கப்பெற்றவுடன், சம்பள பாக்கி கொடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா வரிசை எண் 94, மாண்புமிகு உறுப்பினர் திருமதி பெ. சீத்தாபதி, மாண்புமிகு சுற்றுச்சூழல் துறை அமைச்சர் அவர்கள்.

**94—**

**சுற்றுச்சூழல் மாசுபடுவதைத் தடுத்தல்**

***30246—திருமதி பெ. சீத்தாபதி:**

மாண்புமிகு சுற்றுச்சூழல் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திண்டிவனம் தொகுதி, மரக்காணம் ஒன்றியம், பெருமுக்கல் பகுதியில் உள்ள கல்குவாரிகளால் சுற்றுச்சூழல் மாசுபடுவதைத் தடுக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. கே.சி. கருப்பணன், சுற்றுச்சூழல் துறை அமைச்சர்:** மாண்புமிகு தெய்வத் தாய் புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்குகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தூத்துக்குடி சம்பவத்தில் இன்றைக்கு எதிர்க்கட்சிகள் எல்லாம், தாங்கள் விரித்த வலையிலே பெரிய முயல் மாட்டிவிட்டது; அதை ருசித்து உண்டுவிடலாம் என்று எண்ணி ஏமாந்துவிட்ட நிலையில் அவர்களைப் புறமுதுகு காட்டி ஓட வைத்து, (மேசையைத் தட்டும் ஒலி) மூன்றே நாட்களுக்குள் தமிழகத்தில் அமைதியை நிலைநாட்டி, இன்றைக்குத் தமிழகத்தை சிறப்பான முறையில் வழி நடத்திக் கொண்டிருக்கின்ற மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அருமை அண்ணன் எடப்பாடி பழனிசாமி அவர்களையும், மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களையும் வணங்குகிறேன்.

*2018 மே 31]*

*(அ) மற்றும் (ஆ) திண்டிவனம் தொகுதி, மரக்காணம் ஒன்றியம், பெருமுக்கல் பகுதியில் உள்ள கல்குவாரிகளால் சுற்றுச்சூழல் மாசுபடுவதைத் தடுக்கும்பொருட்டும், கல்குவாரிகளின் இயக்கத்தின்பொழுது ஏற்படும் காற்று மாசினை நீக்கும் பொருட்டும், அத்தொழிற்சாலைகளுக்கு உரிய நீர் தெளிப்பான்களைப் பயன்படுத்துமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது. தகுந்த மாசுத் தடுப்பு சாதனங்களைப் பொருத்தி இயக்க வேண்டுமென்று இப்பகுதியில் உள்ள அனைத்து கல் உடைக்கும் தொழிற்சாலைகளும் அறிவுறுத்தப்பட்டு, கண்காணிக்கப்பட்டு வருகின்றன என்பதை அன்புடன் தெரிவித்துக்கொள்கின்றேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திருமதி பெ. சீத்தாபதி, இருக்கையில் இல்லை. மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.எம். நரசிம்மன் அவர்கள்.*

**திரு. பி.எம். நரசிம்மன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டில் ஏழை எளியவர்கள் ஏற்றம் பெற, புதுமை மற்றும் புரட்சிகரமான திட்டங்களைத் தந்தவர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள். அந்த வகையில், தேர்தல் வாக்குறுதிகளை நிறைவேற்றும் வகையில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களும், மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களும் தமிழ்நாட்டில் திட்டங்களை செவ்வனே நிறைவேற்றி, சாதனை படைத்து வருகிறார்கள். நான் சார்ந்திருக்கிற திருத்தணி தொகுதி, திருத்தணி நகராட்சிப் பகுதியில் உள்ள காந்தி சாலையில் நல்ல தண்ணீர் குளம் உள்ளது. சுற்றுச்சூழல் காரணங்களால் அக்குளம் மாசடைந்து வருகிறது. அதனை தடுத்து திருத்தணி நகருக்கு அழகு சேர்க்கின்ற விதத்தில் பொதுமக்களின் நீண்டநாள் கோரிக்கையான இக்குளத்தினைப் புனரமைத்துத் தர அரசு முன்வருமா என்பதைத் தங்கள் மூலமாக அறிய விரும்புகின்றேன்.*

*முற்பகல் 10–30*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு சுற்றுச்சூழல் துறை அமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு திரு. கே.சி. கருப்பணன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய ஏற்பாட்டின்படி அந்த நல்ல தண்ணீர் குளத்தினைப் புனரமைக்க 1.50 கோடி ரூபாய் சுற்றுச்சூழல் மற்றும் மாசு கட்டுப்பாட்டுத் துறையால் ஒதுக்கப்பட்டுள்ளது என்பதை மாண்புமிகு பேரவைத்*

தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு அன்புடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா வரிசை எண் 95, மாண்புமிகு உறுப்பினர் திரு. இ. பெரியசாமி, மாண்புமிகு உணவு மற்றும் நுகர்பொருட்கள் வழங்கல் துறை அமைச்சர் அவர்கள்.

**95—**

## நேரடி கொள்முதல் நிலையக் கட்டடம்

***22222—திரு. இ. பெரியசாமி:**

மாண்புமிகு உணவு மற்றும் நுகர்பொருட்கள் வழங்கல் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திண்டுக்கல் மாவட்டம், ஆத்தூரில் நேரடி நெல் கொள்முதல் நிலையக் கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. இரா. காமராஜ், உணவு மற்றும் நுகர்பொருட்கள் வழங்கல் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்கள் அனுமதியுடன் திருத்திய விடையினை இப்பேரவைக்கு அளிக்கின்றேன்.

(அ) மற்றும் (ஆ) திண்டுக்கல் மாவட்டம், ஆத்தூரில் நடப்பு நெல் கொள்முதல் பருவத்தில் வாடகைக் கட்டடத்தில் துவங்கப்பட்ட நெல் கொள்முதல் நிலையத்திற்கு நெல் வரத்து ஏதும் இல்லாததால் ஆத்தூர் நெல் கொள்முதல் நிலையம் விளாம்பட்டிக்கு மாற்றப்பட்டுள்ளது. எனவே, இந்நிலையில் இங்கே நிரந்தர நேரடி நெல் கொள்முதல் நிலையக் கட்டடத்தைக் கட்ட வேண்டிய அவசியம் ஏற்படவில்லை என்பதனை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. இ. பெரியசாமி அவர்கள் இருக்கையில் இல்லை.

வினா வரிசை எண் 96, மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ்.எஸ். சரவணன், மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள்.